# வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் மெட்ரோ திட்டத்திற்கு 10 கூடுதல் ரயில்

**சென்னை, மார்ச் 11–**

வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் மெட்ரோ விரிவாக்க திட்டத்திற்காக, ஆந்திராவில் இருந்து, 10 மெட்ரோ ரயில்கள், சென்னை வந்தடைந்தன.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கி மலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப் படுகிறது.

இதன் நீட்டிப்பு திட்டத்தில், வண்ணாரப்பேட்டை–திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, 3,770 கோடி ரூபாய் செலவில், 9.2 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை பணி நடந்து வருகிறது.

இப்பாதை பணி முடிந்து, வரும் ஜூனில், ரயில் போக்குவரத்து துவங்க ஏற்பாடு நடக்கிறது.

மெட்ரோ ரயில் திட்டத்தில், 42 ரயில்கள் மூலம், 250 சர்வீஸ் களுக்கு மேல் இயக்கப்பட்டு வருகிறது.

இத்துடன், இந்த நீட்டிப்பு திட்டத்துக்கு, 200 கோடி ரூபாய் செலவில், 'ஆல்ஸ்டாம்' நிறுவனத்திடம் இருந்து, 10 ரயில்களுக்கான, 40 பெட்டிகள் வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதற்கான நிதி உதவியை, ஜப்பான் பன்னாட்டு நிதி முகமை வழங்கியது.

இப்பெட்டிகள், ஆந்திரா மாநிலம், தடா அருகே உள்ள, ஸ்ரீசிட்டி ஆல்ஸ்டாம் மெட்ரோ தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு வந்தது.

இதில், முதல் ரயிலுக்கான நான்கு பெட்டிகள், 2019 அக்., 19ல், ஸ்ரீசிட்டியில் இருந்து, சென்னை, கோயம்பேடில் உள்ள மெட்ரோ ரயில் பணிமனைக்கு வந்தடைந்தன. மற்ற ஒன்பது ரயில்களுக்கான பெட்டிகள், தயாரிக்கப்பட்டு வந்தன.

இப்பணி முடிந்து, பெட்டிகள் அனைத்தும், தற்போது, கோயம்பேடில் உள்ள, மெட்ரோ ரயில் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டது.

பணிமனையில் உள்ள ஆய்வு பாதையில், ரயிலின் வேகம் மற்றும் பாதுகாப்பு சோதனைகள் நடத்தப்பட்டு, மெட்ரோ ரயில் போக்குவரத்தில், ஜூன் மாதத்தில் இருந்து, இப்பெட்டிகள் சேர்க்கப்படும் என, மெட்ரோ ரயில் போக்குவரத்து பிரிவு அதிகாரி ஒருவர் கூறினார்.



■ கோயம்பேடு மெட்ரோ பணிமனைக்கு வந்த புதிய ரயில்.